செ.வெ.எண்: 599 நாள்: 30.09.2024

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

தொழில்முனைவோர், புத்தாக்க பயிற்சி தொடர்பாக ஓராண்டு சான்றிதழ் படிப்பு அக்டோபர் 14ம் தேதி பயிற்சி வகுப்புகள் தொடக்கம்.

தமிழகத்தில் தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்கம் தொடர்பான ஓராண்டு சான்றிதழ் படிப்பிற்கான பயிற்சி வகுப்புகள் சென்னை Entrepreneurship Development and Innovation Institute கிண்டியில் தொடங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு மற்றும் அகமதாபாத் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் இணைந்து "தொழில் முனைவோர் மற்றும் புத்தாக்கம்" என்ற ஓராண்டு சான்றிதழ் படிப்பு தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி அக்டோபர் 14ம் தேதி முதல் இதற்கான வகுப்புகள் தொடங்கப்படும். தொழில்முனைவோர் மற்றும் புத்தாக்கம் என்ற ஓராண்டு சான்றிதழ் படிப்பிற்கான கட்டணமாக ரூ.80,000/- (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு அல்லது பட்டயப்படிப்பு அல்லது ஐடிஐ அல்லது 10ம் வகுப்பு/ 12ம் வகுப்பு படித்திருப்பதுடன், 2 வருட அனுபவம் இருப்பவர்கள் விண்ணப்பிக்க தகுதியானவர்கள். https://oneyearcourse.editn.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பித்துப் பயன்பெறலாம்.

மேலும் விபரம்பெற இணையதள முகவரி www.edii.tn.in ஆகும். தொடர்புக்கு ஞா.ஆபிரகாம் லிங்கன் மாவட்ட ஒருங்கிணைப்பாளரை 9786644817 என்ற அலைபேசி எண்ணை தொடர்புகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**


புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai